Registered as a Newspaper

# உதயன்

விலை: ரூ. 1-25

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

சுடர்: 2 யாழ்ப்பாணம் பிரபவ ஞூ ஆனி மீ 2 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1407 ஷவ்வா பிறை 18 (16 — 06 — 1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 172

Your Friends In Finance
SHABRA
நிதித்துறையில் உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்
SHABRA
Unico Finance Ltd.

Your Friends In Finance
SHABRA
நிதித்துறையில் உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்
SHABRA
Unico Finance Ltd.

முன்னர் கச்சதீவில் வைத்துத் திருப்பி அனுப்பப்பட்ட

# இந்தியாவின் நிவாரணப் பொருள்கள் காங்கேசனுக்குப் படகுகளில் வரும்

## அரச அதிபர், செஞ்சிலுவை, கூட்டுறவு பிரதிநிதிகள் பொறுப்பேற்று விநியோகம்

### டிக்ஸிற் -- ஹமீத் ஒப்பந்தம் கைச்சாத்தானது

யாழ்ப்பாணம், ஜூன் 16

**யாழ்ப்பாண மக்களுக்கு இந்தியா வழங்கும் நிவாரணப் பொருள்கள் காங்கேசன்துறைத் துறைமுகத்துக்குப் படகுகளில் கொண்டுவரப்படும்.**

**இம்மாதம் மூன்றும் திகதி கச்சதீவுக் கடலில் வைத்து ஸ்ரீ லங்கா அரசினால் திருப்பி அனுப்பப்பட்ட அதே 19 படகுகளும் விரைவில் காங்கேசன் வந்து சேரும்.**

இந்தியப் படகுகள், ஸ்ரீ லங்கா கடற் பிராந்தியத்திற்குள் பிரவேசித்ததும் ஸ்ரீ லங்கா கடற்படை அவற்றுக்குப் பாதுகாப்பு அளிக்கும்.

படகுகள் காங்கேசன்துறை வந்து சேர்ந்ததும், யாழ். அரசாங்க அதிபரும் அவரின் அதிகாரிகளும், யாழ். செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள், கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோரும் நிவாரணப் பொருள்களைப் பொறுப்பேற்று விநியோகிப்பர்.

இவற்றுக்கு வகை செய்யும் ஒப்பந்தம் ஒன்றில் ஸ்ரீ லங்காவும் இந்தியாவும் கைச்சாத்திட்டுள்ளன.

படகுகள் திருப்பி அனுப்பப்பட்டதைத் தொடர்ந்து இந்தியா, விமானங்கள் மூலம் நிவாரணப் பொருள்களை இம்மாதம் நான்காம் திகதி தரை இறக்கியது.

அதைத் தொடர்ந்து ஸ்ரீ லங்கா—இந்திய உறவில் பெரும் நெருக்கடி நிலை ஏற்பட்டிருந்தது.

மூன்றும் திகதி தொடக்கம் இராமேஸ்வரத்தில் நிவாரணப் பொருள்களுடன் காத்திருக்கும் 19 படகுகளையும் இங்கு வருவதற்கு அனுமதித்ததோடு அந்த நெருக்கடி நிலை சற்றுத் தணிந்திருக்கிறது.

(4-ம் பக்கம் பார்க்க)

## சிவில் நிர்வாகத்துக்கு 18 பேர் கமிட்டி

கொழும்பு, ஜூன் 16

யாழ்குடாநாட்டில் சிவில் நிர்வாகத்தை மேற் கொள்ளுவதற்குத் தேவையான நடவடிக்கைகளைஎடுக்க பதினெட்டுப்பேர் கொண்ட கமிட்டி ஒன்று நியமிக்கப் பட்டிருக்கிறது.

தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி இக் கமிட்டியை நியமித்திருக்கிறார். (இ-ஐ-எ)

## ● இதுவரை 41 படகுகளில் அகதிகள்

சென்னை, ஜூன் 16

இதுவரை 41 படகுகளில் இலங்கைத் தமிழ் அகதிகள் தமிழ்நாட்டின் பல இடங்களில் வந்திறங்கி உள்ளனர்.

இதனால் மண்டபம் அகதி முகாம் நிரம்பி வழிகின்றது. புதிதாக வரும் தமிழ் அகதிகளை தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள தூத்துக்குடி அகதி முகாமில் தங்க வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அமைச்சர் இராமசாமி தெரிவித்தார். (இ-எ)

## விரைவில் வழங்க இந்தியா உறுதி

புதுடில்லி, ஜூன் 16

யாழ் குடாநாட்டுக்கான நிவாரண உணவுப் பொருள் விநியோகம் விரைவில் தொடங்க வேண்டும்.

–இப்படி புதுடில்லியில் வெளியுறவு அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யாழ் குடாநாட்டுக்குத் தேவையான உணவுப் பொருள்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டு உள்ளன.

அவற்றை யாழ் மக்களுக்கு விரைந்து வழங்க வேண்டும் என்பதில் இந்திய அரசு அக்கறையாக உள்ளது.

—இபபடி அந்த அமைச்சு அதிகாரி மேலும் தெரிவித்தார். (உ-எ)

## நேற்று வரை 561 புலிகள் வீர மரணம்

யாழ்ப்பாணம், ஜூன் 16

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் நேற்றுவரை 561 விடுதலைப் புலிகள் வீரமரணமடைந்துள்ளனர். (இ 10)

# குரும்பசிட்டி மினிமுகாம் மீது புலிகள் கடும் தாக்குதல்!

## பல சிப்பாய்கள் பலியாகினர்
## புலிகள் சார்பில் அறுவர் வீரமரணம்

— பலாலிச் செய்தியாளர் எஸ். கே. ராஜு —

பலாலி, ஜூன் 16

நேற்று அதிகாலை தமிழீழ விடுதலைப் புலிகள் குரும்பசிட்டி இராணுவ முகாம் மீது கடும் தாக்குதலை மேற்கொண்டனர். முகாம் கட்டடங்கள் பலத்த சேதமுற்றதுடன் பல சிப்பாய்கள் மரணமானார்கள் என்றும் அறிய வந்தது.

விடுதலைப் புலிகள் சார்பில் ஆறு பேர் வீரமரணமடைந்தனர்.

லெப்டினன் மதி (சிறீ பத்மநாதன் — மானிப்பாய்), இரண்டாவது லெப்டினன்ட் வின்சன்ட் (ஞானக்குமார் — மண்டான்), தேவன் (ச.தேவராசா–சங்கானை), மஜீத் (வ. மங்கேளஸ்வரன் — சுழிபுரம்), குமாரி நாடான் (சி. விஜயபாலன் — முழங்காவில்) சிக்கயந்தன் (சின்னத்தம்பி சேனதிராஜா பாஸ்கரன்– கொக்குவில் ஆகியோரே வீரமரணம் அடைந்தவர்கள் ஆவர்.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து இராணுவத்தால் மேற்கொள்ளப் பட்ட ஷெல், ஹெலிக் கொப்டர் தாக்குதலால் பொதுமக்கள் தரப்பில் நாலு பேர் படுகாயமடைந்தனர். ஏழு வீடுகள் சேதமடைந்தன.

### அதிகாலை

நேற்று அதிகாலை இரண்டு மணிக்கு பலாலி முகாமுக்கு மிக அண்மையில் இருக்கும் குரும்ப

(4 ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

16-06-1987

செவ்வாய்க் கிழமை

சுபநேரம்:-
10.23முதல் 11.53வரை

ராகுகாலம்:-
2.53 முதல் 4. 23 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

## 10தமிழர் பலி!

கொழும்பு, ஜூன் 16

மட்டக்களப்பு மாவட்டத்தில் வெல்லாவெளி என்னும் இடத்தில் பொலீஸ் கொமாண்டோக்கள் நடத்தியதாக்குதலில் பத்துத்தமிழர் உயிரிழந்தனர்.

ஆனால் தீவிரவாதிகளின் முகாம்மீது இத்தாக்குதல் நடத்தப் பட்டதாக கொழும்பில் அரசு அறிக்கை ஒன்று தெரிவித்தது. (உ-எ)

## வடமராட்சி மாணவர் எங்கே சென்று பரீட்சை எழுதுவது?

கொழும்பு, ஜூன் 16

அடுத்த மாதம் 25 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஜீ.சி.ஈ. உயர்தரப் பரீட்சைக்கு விண்ணப்பித்த வடமராட்சி மாணவர்கள் எங்கு போய் பரீட்சையை எழுதுவது?

பாதுகாப்பு அமைச்சு இம்மாதக் கடைசியில் இது சம்பந்தமாக முடிவு செய்யும் என்று பரீட்சைத் திணைக்கள ஆணையாளர் திரு. ஸ்டேலின் பெரேரா தெரிவித்தார்.

வடமராட்சிப் பகுதி மாணவருக்கு எந்தப் பகுதியில் பரீட்சை நடத்தப்படும் என்பதைச் சொல்லமுடியாது என்றும் ஆணையாளர் தெரிவித்தார்.

அடுத்த மாதம் 25 முதல் ஆகஸ்ட் 19 வரை இப் பரீட்சை நடைபெற உள்ளது. (இ-எ)

## ● மொட்டை அடித்து நிறுத்தப்பட்டனர்

யாழ்ப்பாணம், ஜூன் 16

இந்தியாவுக்கு அகதிகளாக அழைத்துச் செல்வதாக ஓர் இயக்கத்தின் பெயரைப் பாவித்துப் பணம்பெற்றுவந்த இருவர் நேற்று கையும்மெய்யுமாகப் பிடிபட்டனர்.

இவர்கள் இருவரும் மொட்டை அடிக்கப்பட்டு பொதுமக்களின் பார்வைக்காக நிறுத்தி வைக்கப்பட்டனர்.

யாழ் வின்சர் தியேட்டருக்கு அண்மையில் நடைபெற்ற இச்சம்பவத்தைப் பலர் கூடி நின்று பார்த்தனர்.

## நெல்லியடியில் நான்காவது பொலீஸ் நிலையம்

நெல்லியடிப் பகுதியிலும் புதிய பொலீஸ் நிலையம் ஒன்று திறக்கப்பட்டுள்ளது.

வடமராட்சிப் பகுதியை இராணுவத்தினர் கைப்பற்றிய பின்பு அமைக்கப்பட்ட நான்காவது பொலீஸ் நிலையம் இது ஆகும்.

நெல்லியடிப் பொலீஸ் நிலையத்தில் கடமையாற்றுவதற்கு தமிழ்ப் பொலீஸாருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

எனினும் இப் பொலீஸ் நிலையத்தில் தற்பொழுது இராணுவத்தினரே குடிகொண்டுள்ளனர்.

### முச்சந்தி முரளி



கை பரிமாறிறகட்டத்திலே இருந்தவை இப்பகை கோர்க்கிற நிலைக்கு வந்திட்டினம் பார்க்கையில்லையே...! உலகத்திலே இது இது தான் நடக்கும் எண்டில்லை. எது எதுவும் நடக்கலாம்...

## ஹியா - அத்துலத் மந்திராலோசனை

இஸ்லாமாபாத், ஜூன் 16

நேற்று திடீரென அவசர அவசரமாக பாகிஸ்தானுக்குப் பயணமான ஸ்ரீலங்காவின் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித்அத்துலத்முதலி அங்குபாகிஸ்தான் ஜனாதிபதி ஸியா - உல் ஹக்குடனும், உள்துறை அமைச்சர் ரஷிம் கானுடனும் தனித்தனியே மந்திராலோசனை நடத்தினார்.

அண்மைக் காலத்தில் ஸ்ரீலங்கா அரசபடையினர் வடக்கில் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைகள் குறித்தும்–

அதனையடுத்து இந்தியா எடுத்த நடவடிக்கைகள் பற்றியும் லலித் அத்துலத்முதலி பாக் தலைவர்களுக்கு எடுத்துரைத்ததாக அறிவிக்கப்பட்டது.

எனினும் பேச்சுக்களின் போது ஆராயப்பட்ட விடயங்கள் பற்றி விவரங்கள் ஏதும் வெளியிடப்படவில்லை.

பாகிஸ்தானிடமிருந்து இலங்கை பெறக் கூடிய உதவிகள் பற்றி சந்திப்பின் போது ஆராயப்பட்டதாகத் தெரிய வருகிறது.

பாகிஸ்தான் ஏற்கனவே பத்துலட்சம் டாலர் பெறுமதியான ஆயுத

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் கடலில் 20 சடலங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 16

இந்தியா நோக்கிச் சென்ற இலங்கை அகதிகள் என நம்பப்படும் 20 பேரின் சடலங்கள் மன்னார் கடற்பரப்பில் கரைஒதுங்கியுள்ளன.

சடலங்கள் இனம் காண முடியாதவாறு சிதைந்து காணப்பட்டன.

இச்சடலங்களை அரச செலவில் புதைப்பதற்கு மன்னார் அரச அதிபர் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

# ஒவ்வொரு தமிழ் மகனும் புலியாக மாற வேண்டும்

## திலீபன் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஜூன் 16

இன்றைய தமிழீழ விடுதலைப்போராட்ட வரலாற்றில் ஒவ்வொரு தமிழ்ப் பொது மகனும் விடுதலைப்புலியாக மாற வேண்டும். புலிகளுடன் ஒன்றிணைந்து போராட வேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் திரு. திலீபன் நேற்று நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்தார்.

ஸ்ரீலங்காவின் 20ஆயிரத்துக்கும் மேற்பட்ட அரச படையினர் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை அழிக்க எடுத்த முயற்சியை விடுதலைப் புலிகள் படிப்படியாக தகர்த்து வருகின்றனர்.

இதே நேரம் விடுதலைப்

(4ஆம் பக்கம் பார்க்க)

ஸ்ரீலங்காவின்

## ஆகாயப் பிராந்திய பாதுகாப்புக் குறித்து இஸ்லாமாபாத்தில் பேச்சு

புதுடில்லி, ஜூன் 16

ஸ்ரீலங்காவின் ஆகாயப் பிராந்தியத்தைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளை எடுப்பதற்கான பேச்சுக்கள் இஸ்லாமாபாத்தில் ஏற்கனவே ஆரம்பமாகிவிட்டன.

இப்படி புதுடில்லியில் நம்பிக்கையான வட்டாரங்கள் தெரிவித்தன என்று 'இந்து' செய்தி வெளியிட்டிருக்கின்றது.

யாழ் குடாநாட்டுக்கு விமான மூலம் உணவுப் பொதிகளை இந்தியா போட்டதைத் தொடர்ந்து, ஸ்ரீலங்கா—பாகிஸ்தான் உறவுகள் நெருங்கியுள்ளன.

ஆகாயப் பிராந்தியத்தைப் பாதுகாக்கும் செயல் திட்டங்கள் பற்றியே இஸ்லாமாபாத்தில் பேச்சுக்கள் நடைபெற்று வருகின்றன.

## வவுனியாவில் குண்டு வெடிப்பு மாணவன் பலி!

கொழும்பு, ஜூன் 16

வவுனியா நகரில் குண்டு வெடித்து பாடசாலை மாணவன் ஒருவன் அந்த இடத்திலேயே மரணமானான்.

இறந்த மாணவனின் பெயர் சாந்தா சமரசிங்கா.

வேறு இரண்டு மாணவர்கள் காயமடைந்தனர்.

அவர்கள் வவுனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். (இ-எ)

இளைய கலைமுறையின் இதயக் குரல் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சின்னஞ்சிறு விளம்பரம்**

**மணமகள்கள் தேவை**

யாழ்/இந்து உயர் வேளாள குடும்பத்தைச் சேர்ந்த தராதரம் படித்த உத்தியோகம், தொழில் நிறுவனம், பிரபல சொந்த வியாபாரம், நிரந்தர வெளிநாட்டு உத்தியோகம் (ஜேர்மனி) உள்ள மணமகன்கள் 37-25 இடைப்பட்ட வயதுகளில் உண்டு. தொடர்பு கொள்க:- S. பரதாசன் 218/2, பலாலி வீதி, கந்தர்மடம் சந்திக்கு அருகாமையில், கந்தர்மடம். (1420)

நல்ல நிலையிலுள்ள டீசல் என்ஜின் வான் தேவை தொடர்புகொள்ளவேண்டிய முகவரி: பரணி மிசன் விற்பனை நிலையம் 145, நவீன சந்தை, யாழ்ப்பாணம். (1424)

**விற்பனைக்கு**

மீசாலைவடக்கில் ஐந்து பரப்புக்காணியும், கிணற்றுடன் வீடும், தற்காலச் சூழ்நிலைக்கு மிக உகந்தஇடம். தொடர்பு: செ. கந்தசாமி, கண்ணன் ஸ்ரோர்ஸ், மீசாலை வடக்கு. (1422)

Baraha Farms Hisex பிறவுண் 1 வார பேட்டுக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. Hisex பிறவுண் 1 நாள் பேட்டுக் குஞ்சுகள். சேவற்குஞ்சுகள் Hybro புரொயிலர் குஞ்சுகள், Hy-ine வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகள் முதலியன 19ந் திகதி வெள்ளிக்கிழமை விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்க. சற்குணராஜா பிறதர்ஸ். பிரம்படி, கொக்குவில். (1423)


# நாளாந்தம் நஷ்டம் அடைகிறது மாநகரசபை

## அகதிகளாகியுள்ள மக்களிடம் கட்டணங்களை அறவிட முடியுமா?

### ஆணையாளர் கேட்கிறார்

யாழ்ப்பாணம், ஜூன் 16

இலங்கை அரசின் இராணுவ நடவடிக்கைகளால் யாழ் மாநகர சபை நாளாந்தம் அளவிட முடியாத நஷ்டத்தை அடைகின்றது. பல அபிவிருத்தி, பராமரிப்பு வேலைகள் தடைப்பட்டுள்ளன.

யாழ் மாநகர ஆணையாளர் திரு. சி. வீ. கே. சிவஞானம் இவ்வாறு தெரிவித்தார்.

திடீர் இராணுவ நடவடிக்கைகளால் யாழ் மாநகர எல்லைக்குள் மட்டும் இருபதாயிரம்பேர் அகதிகளாக இடம் பெயர்ந்தனர்.

கோட்டை முகாம் விஸ்தரிப்பால் மாநகர சபைக் கட்டடம், நூலகம், சந்தைகள், பூங்கா, திறந்தவெளியரங்கு என்பன வற்றுடன் சுடலையும் செயல் இழந்துள்ளது.

பொம்மர், ஷெல் தாக்குதல்களால் கடைகள் சேதமுற்றுள்ளன.

மின்சார விநியோகம் தினமும் தடைப்படுகின்றது.

அதற்கான திருத்த வேலைகளுக்கே தினமும் பெரும் செலவு ஏற்படுகின்றது.

அகதிகளான பொது மக்களிடம் வரியோ, அல்லது மின்சாரக் கட்டணமோ, கடை வாடகையோ அறவிடமுடியாதுள்ளது.

அண்மையில் நடைபெற்ற பொம்மர் ஷெல் தாக்குதல்களில் முதலாம் குறுக்குத்தெருவில் உள்ள நீர் விநியோக குழாய் பழுதடைந்துள்ளது.

இதன் திருத்த வேலைகளுக்குச் சென்ற ஊழியர் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார்.

இதனால் குருநகர்ப் பகுதிக்கான நீர் விநியோகம் தடைப்பட்டுள்ளது.

இவ்வாறு ஆணையாளர் மேலும் தெரிவித்தார். (இ-எ)

---

சிப்பாய்களால் சுடப்பட்ட

## இளைஞனிடமிருந்த ரூ. 35,000 எங்கே?

முள்ளியவளை, ஜூன் 16

அண்மையில் தப்பி ஓட முயன்றதாக கூறி முல்லைத்தீவில் வைத்து சிப்பாய்களால் சுடப்பட்ட இளைஞன் உண்மையில் தப்பியோட முயற்சித்தாரா?

அவரிடமிருந்த ரொக்கப்பணத்தை அபகரிக்கவே சிப்பாய்கள் அப்படி ஒரு நாடகத்தை நடத்தினராம்.

சுட்டுக்கொல்லப்பட்ட இளைஞனுடன் கூட வந்த ஒருவர் இங்கு இத்தகவலை தெரிவித்தார்.

சம்பவம் பற்றி அவர் தெரிவித்ததாவது - உடப்பைச் சேர்ந்த மேற்படி இறந்த இளைஞன் தனது நண்பனிடம் கொடுப்பதற்காக 35 ஆயிரம் ரூபாவை தம்முடன் மினிபஸ்ஸில் எடுத்து வந்தார்.

முல்லைத்தீவு ஆஸ்பத்திரிக்கு முன்பாக நின்ற சிப்பாய்கள் மினிபஸ்ஸை மறித்து சோதனை செய்தனர்.

சோதனை செய்த சிப்பாய்கள் சிலர் இளைஞரிடம் இருந்த பணத்தைக் கண்டனர்.

அவரைத் தாக்கி இராணுவ முகாமுக்கு அழைத்துச் சென்றனர்.

சிறிது தூரம் சென்றதும் இளைஞரைச் சுட்டுக் கொன்றனர்.

இளைஞன் தப்பியோட முயன்றதால் தாம் சுட்டதாக சிப்பாய்கள் முறையிட்டனர்.

இவ்வாறு அவர் தெரிவித்தார். (இ-எ-93)

---

**விளையாட்டரங்கு**

## இடம் பெயர்ந்தோர் கழகம் வெற்றி

முள்ளியவளை, ஜூன் 16

அண்மையில் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த 29 கழகங்களுக்கிடையே நடைபெற்ற கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் திருகோணமலை இடம்பெயர்ந்தோர் ஐக்கிய விளையாட்டுக் கழகம் முதலாம் இடத்தைப் பெற்றது.

மணற்குடியிருப்பு சரீர உதவி சனசமூக நிலையம் இரண்டாம் இடத்தையும், புதுக்குடியிருப்பு உதய சூரியன் இடம் பெயர்ந்தோர் விளையாட்டுக் கழகம் மூன்றும் இடத்தையும் பெற்றன.

போட்டிகள் யாவும் செல்வபுரம் சந்திரன் சனசமூக நிலையத்தில் நடைபெற்றன. (உ-ள)

### அகதிகள் விவரம் சேகரிப்பு

வட்டுக்கோட்டை, ஜூன் 16

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அகதிகளாக தஞ்சம் அடைந்திருப்போரது விவரங்கள் கிராமசேவையாளர்கள் மூலம சேகரிக்கப்பட்டு வருகின்றன.

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள 10 கிராம சேவையாளர் பிரிவுகளிலிருந்தும் விவரங்கள் சேகரிக்கப்பட்டதும் அவர்களுக்கு நிவாரண உதவிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். (இ-161)

---

# சுகாதாரச் சீர்கேடே சிரங்கு நோய் பரவக் காரணம்

### வைத்திய அதிகாரி உரை

மானிப்பாய், ஜூன் 16

"சொறி சிரங்கு போன்ற நோய்கள் இன்று பரவலாகக் காணப்படுகின்றனஇதற்குக் காரணம் சுகாதார சீர்கேடே ஆகும். இக் கிராமத்தில் உள்ள பல சிறுவர்களுக்கு சிரங்கு நோய் காணப்படுகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளுக்குள்ளாகவே இந் நோய் அதிகரித்துள்ளது. இக் கிராமத்துக்கென 20 பேர் கொண்ட சுகாதாரத் தொண்டர்கள் உள்ளனர். அவர்கள் மூலம் நோய்த் தடுப்புச் சிகிச்சைகள் பெற்றுஎதிர்காலத்தில் இக் கிராமத்தில் நோய் பரவாமல் தடுக்கவேண்டும்.

சங்குவேலிக் கிராமத்தில் குடும்பநல சபைத் தொண்டர்கள் அறிமுக விழா அண்மையில் நடைபெற்றது.

இதை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய பிராந்திய வைத்திய அதிகாரி திரு. என். கனகசபை மேற்கண்டவாறு கூறினார்.

குடும்பநல சபைத் தலைவர் டாக்டர்லட்சுமணன் தலைமையில் விழா நடைபெற்றது.

விழாவில் வைத்திய அதிகாரி திரு. கனகசபை குடும்ப நலச் சங்கத்தின் திட்டங்களையும் பணிகளையும் எடுத்துரைத்தார்.

குடும்பத் திட்டச் சங்கம் என்றதும் அது குடும்பத்தைக் கட்டுப்படுத்தும் கட்டுப்பாட்டுச் சங்கம் எனக் கருதக்கூடாது.

ஒரு குடும்பத்துக்கான வருமானம் செலவு, சுகாதாரம், மலசலகூட அமைப்பு-நோய்த்தடுப்பு வசதிகள்போன்றதடும்ப நல அம்சங்களைக் கொண்டுள்ளதும் அவற்றை மக்களுக்கு எடுத்துரைத்து நலம் பேணுவதுமே இதன் நோக்கமும் பணிகளுமாகும்.

இப்படி அவர் கூறினார்.

யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதாரப் பரிசோதகர் திரு. க. தங்கவேலாயுதமும் கூட்டத்தில் உரையாற்றினர். இ-90)

---

## விஞ்ஞானமாணிப் பட்டப் பயிற்சி நெறி

யாழ்ப்பாணம், ஜூன் 16

விஞ்ஞான மாணிப் பட்ட பயிற்சி நெறிக்கான விண்ணப்பப் படிவங்களை யாழ். பிறவுண் வீதியில் உள்ள திறந்த பல்கலைக்கழகத்தின், தொழில் நுட்பக் கல்லூரி பிரதேச அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

இப் பயிற்சி நெறி 3 வருடம் தொடக்கம் 5 வருடம் வரை இருக்கும்.

பதிவாளர், திறந்த பல்கலைக்கழகம், நுகெகொட என்ற முகவரிக்கு ரூபா 30/- க்கு காசு கட்டளை எடுத்து கொண்டு வருபவர்களுக்கு மட்டும் யாழ். பிரதேச அலுவலகத்தில் விண்ணப்பப் படிவங்கள் விநியோகிக்கப்படும். விண்ணப்பிப்பதற்கான முடிவு திகதி 3-7-1987 என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

---

தற்போதைய சூழ்நிலையால்

# மாணவரின் கல்வி ஆர்வம் குன்றி வருகின்றது

புங்குடுதீவு, ஜூன் 16

மாணவர்கள் மத்தியில் கல்வி ஆர்வம் இன்று குன்றி வருவதை அவதானிக்க முடிகிறது. இன்றைய சூழ்நிலையே இதற்கு முக்கிய காரணமாகும். இந்நிலை நீடித்தால் நமது பிள்ளைகளின் எதிர்காலம் இருள் சூழ்ந்ததாக மாறிவிடும். இதனை நன்கு உணர்ந்து பெற்றோர்கள் விழிப்புடன் செயற்படவேண்டும், ஆசிரியர்களுடன் ஒத்துழைத்துப் பிள்ளைகளின் கல்வித்தரத்தைப் பேணமுன்வரவேண்டும்.

இவ்வாறு கூறினார் புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகாவித்தியாலய அதிபர் திரு. த. துரைசிங்கம்.

### பெற்றோர் விழிப்புடன் செயலாற்ற வேண்டும் என்கிறார் அதிபர்

பிரஸ்தாப வித்தியாலய அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. துரைசிங்கம் தொடர்ந்து பேசுகையில் பாடசாலைகளைப் பேணிப் பாதுகாக்கும் பொறுப்பு பெற்றோர்களையே சார்ந்துள்ளதென்றும், இன்றைய மாணவர்களின் எதிர்காலநலன் கருதி பெற்றோர்களும் ஆசிரியர்களும் ஒன்றுபட்டுச் செயலாற்றவேண்டியது அவசியமென்றும் கூறினார்.

திரு. வி. ஆர். கே. இரத்தினசபாபதி பேசுகையில் ஸ்ரீகணேச மகாவித்தியாலம் கல்வித்துறையில் மட்டுமன்றி விளையாட்டுத் துறையிலும் சாதனைகளை நிலைநாட்டியுள்ளது மகிழ்ச்சிக்குரியது என்றும் இதன் வளர்ச்சிக்குப் பெற்றோர்கள் பூரண ஆதரவு நல்க முன்வர வேண்டியது அவசியமென்றும் கூறினார்.

திரு. க. பொன்னம்பலம் பேசுகையில் ஆசிரியர் பற்றுக்குறை, தளபாடத் தட்டுப்பாடு போன்ற பல்வேறு குறைகளால் புங்குடுதீவுப் பாடசாலைகளின் கல்வி நிலை பெரிதும் பாதிக்கப்படுவதாகவும், இக்குறைபாடுகளைப் போக்கக் கல்வித் திணைக்களம் முன்வர வேண்டுமென்றும் கூறினார்.

ஆசிரியர் திரு. பொ. சபாரெத்தினம், செல்வி த. மணிமேகலை ஆகியோர் உட்பட வேறு பலரும் உரையாற்றினர்.

சங்கத்தின் நடப்பு வருட நிர்வாகிகள் தெரிவும் இடம்பெற்றது. (இ-131)

---

விமானம் மூலம் உணவுப்பொதி விநியோகம்!

# சகலரும் பாராட்டவேண்டும்; அமெரிக்க செனட்டர் சொல்கிறார்

யாழ்ப்பாணம் ஜூன் 16

விமானமூலம் யாழ். குடாவில் உணவுப் பொதிகளை விநியோகிக்க எடுத்த பிரதமர் ராஜீவ் காந்தியின் மனிதாபிமான உதவியை சகலரும் பாராட்டவேண்டும்.

இப்படி பிரபல அமெரிக்க செனட்டர் மெர்வின் டிமாலி தெரிவித்தார்.

ஆசிய, பசுபிக் பிராந்தியத்துக்கான அமெரிக்க செனட் வெளியுறவு கமிட்டியின் உறுப்பினர் இவர்.

இக் கமிட்டியின் தலைவரான செனட்டர் ஸ்டீபன் ஸோலார்ஸும் பிரதமர் காந்தியின் இந்த நடவடிக்கையை பாராட்டி இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-எ)

---

## பல்கலைக் கழகங்கள் உடனடியாக திறக்கப்படமாட்டா

கொழும்பு, ஜூன் 16

அமைதி நிலவுவதாகக் காணப்பட்டால் தான் பல்கலைக்கழகங்கள் மீண்டும் திறக்கப்படும்.

இப்படி பல்கலைக்கழகங்கள் கவுன்சில் தீர்மானித்திருக்கிறது. பல்கலைக் கழகங்களின் துணைவேந்தர்கள் கடந்த வெள்ளிக்கிழமை, பல்கலைக் கழக மான்யக் கமிஷன் தலைவர் டாக்டர் ஸ்டான்லி கல்பகே தலைமையில் கூட்டம் நடத்தினர். (இ-எ)

---

# தோணிதாண்டமடு படுகொலை குறித்து

## பிரசைகள் குழுவிடம் புகார்

மட்டக்களப்பு, ஜூன் 16

மட்டக்களப்பு வாகரை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள தோணி தாண்டமடு குடியேற்ற கிராமத்தில் தேசிய வீரர் தினமன்று சிப்பாய்கள் நடத்திய அட்டகாசத்தினால் குழந்தைகள் முதல் வயோதிபர்கள் வரை 15 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். உடமைகள் தீக்கிரையாக்கப்பட்டன இந்தச் சம்பவம் குறித்து பிரசைகள் குழுவுக்கு புகார் செய்யப்பட்டுள்ளது.

தேடுதல் எனக் கூறி படையினர் இச்செயலைப் புரிந்துள்ளார்கள் எனப் புகார்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொல்லப்பட்டுள்ளவர்கள் விபரம் வருமாறு:-

சி. கண்ணகி (60வயது) மகள் பவானி (21 வயது) தே. கமலா (20 வயது) மகன் செல்வகுமார் (22 வயது) கு. மனோன்மணி (22 வயது) மகன் லிங்கராஜா (8 வயது) பெயரிடாத குழந்தை (6 மாதம்)

சி. பத்மசீலன் (7வயது) சொ. ரவிச்சந்திரன் (12 வயது) சி. செல்வரஞ்சன் (20வயது) வீ. தங்கதுரை (22 வயது) செ. கணேசரெத்தினம் (22 வயது) செ.நடராஜா (23வயது) க. வேலன் (23 வயது) மகன் முருகுப்பிள்ளை (10 வயது) (இ-21)

---


NEW MASTER Institute

NAVALAR ROAD, JAFFNA.

Day Class & Weekend Class

யாவும் நடைபெறுகின்றன.

மேலதிக விபரங்கட்கு:

கல்வி நிறுவனத்தில் தொடர்புகொள்ளவும்.

நிர்வாகம்

New Master Institute


---

**செய்திக்கொத்து**

### விநாயகர் திருவகவல் மனனப் போட்டி

வட்டுக்கோட்டை, ஜூன் 16

வட்டுக்கோட்டை கிழக்கு வாசகர் வட்ட இந்துமா மன்றத்தினர் வட்டுக்கோட்டை கிழக்கு பிரமனாட்சி தோட்டத்துக் கற்பக விநாயகர் ஆலய மகாகும்பாபிஷேகத்தை முன்னட்டு நக்கீரதேவர் அருளிய "விநாயகர் திருவகவல்" மனனப் போட்டி ஒன்றை நடாத்தவுள்ளனர்.

இம்மனனப் போட்டியில் கலந்துகொள்ள விரும்புவோர் இம்மாதம் 23ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் வாசகர் வட்ட இந்துமா மன்றத்திடம் தமது பெயர்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (இ161)

### ஒக்ஸ் பாம் உதவி

முள்ளியவளை, ஜூன் 16

முல்லைத்தீவு மாவட்டத்தில் அகதிப் பிள்ளைகள் படிக்கும் பாடசாலைகளில் 15 வயதுக்குட்பட்ட இரண்டாயிரம் மாணவர்களுக்கு பாடசாலைச் சீருடைகள், பென்சில், பேனை ஆகியவைகளை ஒக்ஸ் பாம் (Ox Farm) ஸ்தாபனம் முல்லைத்தீவு அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் மூலம் வழங்கியது. (இ-93)

### கல்விப்பணிப்பாளர் திடீர் விஜயம்

வட்டுக்கோட்டை, ஜூன் 16

வட்டுக்கோட்டை கொத்தணி அமைப்பில் உள்ள சில பாடசாலைகளுக்கு யாழ் கல்விப் பணிப்பாளர் ஜனாப் எம். எம். மன்சூர் சமீபத்தில் திடீர் விஜயம் மேற்கொண்டார்.

அராலி இந்துக் கல்லூரி, அராலி வடக்கு அ. மி. த. க. பாடசாலை ஆகியவற்றுக்கு திடீர் விஜயம் செய்த கல்விப் பணிப்பாளர் அப்பாடசாலைகளின் நிர்வாக விடயங்களை அவதானித்ததோடு ஆசிரியர்கள் வரவு, மாணவர்கள் வரவு முதலானவற்றையும் அவதானித்து ஆலோசனைகள் வழங்கினார். [இ-161]

### மயானக் கிணறு சிரமைக்கப்பட்டது

வட்டுக்கோட்டை, ஜூன் 16

அராலி வடக்கு மயானத்தில் உள்ள பாழடைந்த கிணற்றை அராலி வடக்கு செல்வா சனசமூக நிலையத்தினர் சிரமதான முறையில் துப்பரவு செய்தனர்.

சனசமூக நிலையத் தலைவர் திரு. எம். யோகேந்திரன் தலைமையில் இந்தச் சிரமதானப் பணி நடைபெற்றது. (உ-116)

---

படை வாபஸாகாவிடில்

# போர்நிறுத்தம் இல்லை

### புலிகள் பேச்சாளர் கூறுகிறார்

கொக்குவில், ஜூன் 16

எமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரை ஸ்ரீ லங்கா அரசுடன் பேச்சு வார்த்தைக்கோ, அல்லது தமிழ் பிரதேசங்களிலிருந்து ஸ்ரீலங்கா இராணுவம் வெளியேறும் வரை போர் நிறுத்தத்துக்கோ விடுதலைப் புலிகள் இணங்க மாட்டார்கள்.

கொக்குவில் நந்தாவிலில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் விடுதலைப்புலிகள் பிரமுகர் முரளி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஏனைய நாட்டு விடுதலைப் போராட்டங்களுடன் ஒப்பிடுகையில் தமிழீழப் போராட்டம் குறுகிய காலத்தில் மிகப் பெரிய வளர்ச்சியை அடைந்துள்ளதை அனைத்து நாட்டவர்களும் அறிவர்.

இப் போராட்டத்தில் மக்கள் ஒவ்வொருவரும் தம் பங்களிப்பைச் செலுத்தி வெற்றியை விரைவில் பெற வழிகோல வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். (இ-64)

---

# மிளகாய்ச் செய்கை பெரும் அளவு வீழ்ச்சி

### சல்பருக்கு கட்டுப்படாத குருமன்நோய்

மானிப்பாய், ஜூன் 16

யாழ்ப்பாண மாவட்டத்தில் இவ்வருடம் மிளகாய்ச் செய்கை அதிகளவு வீழ்ச்சி காணப்படுவதாக பயிர்ச் செய்கை உத்தியோகத்தர் ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

மிளகாய்ச்செடிகளுக்கு ஏற்பட்டுள்ளநோய்களும் அவற்றை அழிக்கமுடியாத நிலையுமே மிளகாய்ச் செய்கைப் பாதிப்புக்குக் காரணம் ஆகும்.

குருமன் நோய் இம் முறை அதிகளவில் மிளகாய்ச் செடியைத் தாக்கியுள்ளது.

இதனால் மிளகாய்ச் செய்கையாளர்கள் பலர் இம்முறை மிளகாய்ச் செய்கையில் ஈடுபாடு காட்டவில்லை.

குருமன் நோயை முன்னர் சல்பர் எனப்படும் மருந்தை உபயோகித்து கட்டுப்படுத்தக் கூடியதாக இருந்தது.

ஆனால் தற்போது செவிக்குரோன் போன்ற சக்தி கூடிய மருந்துக்குக் கூட நீங்குவதாக இல்லை.

உடுவில், இணுவில், புன்னாலைக்கட்டுவன், குரும்பசிட்டி, அச்சுவேலிப் பகுதிகளில் குருமன் நோய் காரணமாக சுமார் முன்னூறு ஹெக்டேயர் பரப்பளவு காணிகள்ல் மிளகாய் செய்கை பாதிக்கப்பட்டுள்ளது.

குருமன் நோய்த் தாக்கத்துக்கும் அதனைக் கட்டுப்படுத்த முடியாதிருப்பதற்கும் தொடர்ச்சியான வெப்ப நிலையும் உஷ்ணமுமே காரணம் என்று கூறப்படுகிறது. (இ.90)

---

## தனிநபர் சுதந்திரம் பற்றி ஜனாதிபதி

தனிநபர் சுதந்திரம் ஸ்ரீலங்கா அரசினால் தொடர்ந்து பாதுகாக்கப்படும்.

ஜனாதிபதி ஜெயவர்த்தன இப்படித் தெரிவித்தார்.

வனாத்தமுல்லையில் நடந்த கூட்டத்தில் பேசுகையில் ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

அகந்தை என்பது பசி தாகம் குளிரில் கொடியது.

— ஜெபர்சன்

உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல:- 292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805 22073

16.6.1987 த.பெ.இல: — 23

# கடற்கொலைகள்

ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் தமிழர் கொலைக் களம் இப்போது சற்று இடம் தள்ளப்பட்டுள்ளது.

கடந்த மாத இறுதியில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் அரச படைகள் கொடூரமான கொலைகளை நடத்தின. அவை எண்ணில் அடங்கா. குண்டுவீச்சு, ஷெல்லடி, பீரங்கி வேட்டு, கத்தி வெட்டுக் கொத்து என்று பெரும்பாலான கொலைகள் வடமராட்சியில் இடம்பெற்றன. அதாவது வடமராட்சியே அப்போது ஸ்ரீலங்கா அரசபடைகளின் பிரதான தமிழர் கொலைக்களமாக விளங்கியது.

இப்போது அந்தக் கொலைக்களம் சற்று இடம் நகர்த்தப்பட்டிருக்கிறது. கடந்த நான்கு ஐந்து நாட்களாக பாக்கு நீரிணைக் கடற்பகுதியே பிரதான கொலைக்களமாக மாறி உள்ளது.

குடாநாட்டில் இருந்தால் தமது உயிரைப் பறிகொடுக்க நேரிடும் என்ற பீதியினால் ஆயிரக்கணக்கான மக்கள் கடல் மார்க்கமாக அகதிகளாக இந்தியா செல்கிறார்கள்.

இங்கு இருப்பவர்கள் மனிதர்கள் அல்லர். அவர்களுக்கு உயிர் என்று ஒன்றில்லை. அவர்களைப் பாதிக்கக் கூடியதாக எது நடந்தாலும் எமக்கு என்ன? நமது உயிர்தானே நமக்குப் பெரியது என்று அவர்கள் அகதிகளாக இந்தியாவுக்கு ஓடுகிறார்கள். அது சரியா, தவறா என்பது தனியாக ஆராயப்பட வேண்டியது.

ஏற்கனவே இப்பந்தியில் அது குறித்து ஆராய்ந்துமாகிவிட்டது.

உடைமைகளை இழந்து, உறவுகளைப் பறிகொடுத்து இருக்க இடமின்றி, உண்ண உணவின்றிக் கஷ்டப்பட்டு அகதிகளாக இந்தியா போவோர் ஒரு ரகம்.

ஆயுதப்படைகளால் ஏற்படக் கூடிய உயிராபத்திலிருந்து தப்புவதற்காக முன்கூட்டியே இடம்பெயர்ந்து இந்தியாவுக்குத் தப்பி ஓடுவோர் இரண்டாவது ரகம்.

இரண்டு வகையினருமே அகதிகளாகக் கணிக்கப்பட வேண்டியவர்கள் தான். அவர்கள் சட்டரீதியான போக்குவரத்து முறைகளை அனுசரித்து இந்தியா செல்வதற்கு அரசாங்கம் அனுமதிக்காது. கால அவகாசமும் போதாது. அதனால்தான் அவர்கள் கடல் மார்க்கமாக இந்தியா போக முயற்சிக்கிறார்கள்.

இந்தியா அவர்களை அகதிகளாக ஏற்பதற்கு தயாராக இருக்கும் வரை, அங்கு செல்லும் குடாநாட்டு மக்களைத் தடுப்பதற்கு ஸ்ரீலங்கா அரசாங்கத்துக்குப் பாத்தியதை இல்லை.

பாதிக்கப்பட்டவர்கள், பாதிக்கப்படலாம் என அஞ்சுபவர்கள் தாம் விரும்பிய இடத்துக்குப் போய் தஞ்சமடைய உரித்துடையவர்கள். அரசாங்கத்துக்கு அவர்களைத் தடுக்கும் உரிமை இருக்க முடியாது. இது மனிதாபிமானப் பிரச்சினை.

இதனைத் தெரிந்தோ தெரியாமலோ, தமிழர்களை கொல்வதற்கெனத் தருணம் பார்த்திருக்கும் ஸ்ரீலங்காவின் அரசபடைகள், அகதிகள் செல்லும் படகுகள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தும், படகுகளை வழிமறித்து அகதிகளாகச் செல்வோரை பிடித்துச் சென்று கொலை செய்து கடலில் வீசியும் அக்கிரமம் புரிவதாகச் செய்திகள் வெளிவருகின்றன. குடாநாட்டின் கரையோரங்களில் தமிழர் சடலங்கள் பல கடந்த சில நாட்களாகக் கரை ஒதுங்குகின்றன என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பயங்கரவாதிகள் என நினைத்து அகதிகளைச் சுட்டதாக ஸ்ரீலங்கா அரசு மழுப்பல் நியாயம் கூறவே செய்யும். அது ஏற்றுக் கொள்ள முடியாதது. அகதிகள் என்று தெரிந்துகொண்டே படையினர் கடற்கொலைகளைப் புரிகின்றனர். வெள்ளைக்கொடி கட்டிக்கொண்டு சென்ற படகுகள் மீதும் துப்பாக்கிப்பிரயோகம் செய்யப்பட்டிருக்கின்றது. இதுவும் இன ஒழிப்பின் ஓர் அங்கமே.

மனித உரிமைகளிலும், அகதிகள் நிலை குறித்தும் அக்கறை காட்டும் சர்வதேச இயக்கங்கள், ஸ்தாபனங்கள் கடற்கொலைகள் குறித்துத் தமது கவனத்தில் எடுத்துக்கொள்ளுதல் அவசியம்.

தமிழர்களை மண்ணில் வைத்து அழித்தது போதாது என்று இப்போது கடலிலும் அந்தப் படுபாதகம் தொடங்கி உள்ளது. அது தடுக்கப்பட்டாக வேண்டும்.

## பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

யாழ்ப்பாணம், ஜூன் 16

யாழ் / ஆனைப்பந்தி மெ. மி. த. க. பாடசாலை அபிவிருத்திச்சங்க நடப்பாண்டுப் பொதுக் கூட்டம் சமீபத்தில் நடைபெற்றது. பின்வருவோர் உத்தியோகத்தர்களாகத் தெரிவானினர்.

தலைவர்: திரு. ச. கைலாயபிள்ளை (அதிபர்) உபதலைவர்: திரு. இரா. லோகநாதன், செயலாளர்; திரு. க. க. இராஜேந்திரன், உபசெயலாளர்; திரு. த. உலோகநாதபிள்ளை, பொருளாளர்: திருமதி பத்மநாதன் (ஆசிரியை)

செயற்குழு உறுப்பினர்கள்: திரு. எம். சி. மாணிக்கவாசகர், திருமதி பி. அன்ரனி, திருமதி வேலாயுதம், திரு. இராஜசிங்கம், திரு. கா. நடேசன், திருமதி பரமலிங்கம்.

கணக்காய்வாளர்: திரு. வி.ஜி. ஜே.மூர்த்தி (இ)

# பாகிஸ்தானுக்கு அமெரிக்க எவாக் உளவு விமானங்கள்

## இந்திய எதிர்ப்புக்கு மத்தியில் வழங்குவதற்கு நடவடிக்கை

வாஷிங்டன், ஜூன் 15

பிரச்சினைக்குரிய எவாக் உளவு விமானங்களை பாகிஸ்தானுக்கு வழங்க அமெரிக்க அரசு விருப்பம் தெரிவித்துள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

இந்த விமானங்களை பாகிஸ்தானுக்கு வழங்குவதற்கு இந்தியா கடும் எதிப்புத் தெரிவித்திருந்தும், அமெரிக்கா தனது விருப்பத்தை வெளியிட்டிருக்கின்றது.

பாகிஸ்தான் எவாக் விமானங்களைப் பெறுவதன் மூலம் இந்திய துணைக் கண்டத்தில் ஆயுதப் போட்டி அதிகரிக்கும் என்று இந்தியா தனது அச்சத்தை அமெரிக்காவுக்கு ஏற்கனவே அறிவித்திருந்தது.

இது விஷயம் அண்மையில் அமெரிக்க செனட்டின் ஆசிய பசுபிக் பிராந்தியத்துக்கான வெளியுறவுக் கொள்கைக் கமிட்டி முன் ஆராயப்பட்டது.

அப்போது பல செனட்டர்கள் இந்தியாவுக்கு ஆதரவாக கருத்து வெளியிட்டிருந்தனர்.

எவாக் விமானங்கள் ஆப்கான் எல்லையில் மட்டும் பாகிஸ்தானால் பயன்படுத்தப் படமாட்டாது. இந்திய எல்லைப்புறத்திலும் பயன்படுத்தப்படும்— இப்படி அச் செனட்டர்கள் கமிட்டி விசாரணையில் தெரிவித்தனர். (இ—எ)

### விசாரணை முடிந்தது

வாஷிங்டன், ஜூன் 14

அமெரிக்க யுத்தக் கப்பல் ஒன்றின் மீது ஈராக் நடத்திய ஏவுகணைத் தாக்குதல் சம்பவம் குறித்து அமெரிக்க காங்கிரஸ் விசாரணைக் குழு நடத்திய விசாரணை முடிவடைந்து விட்டது.

இச் சம்பவத்தில் இரு தரப்பினரும் தவறுவிட்டிருந்தனர் என்றுகமிட்டி தனது அறிக்கையில் தெரிவித்திருக்கின்றது.

இந்த ஏவுகணைத்தாக்குதலினால் அமெரிக்கயுத்தக் கப்பல் 'ஸ்டார்க்' சேதமடைந்ததும் 37 கடற்படை வீரர்கள் உயிரிழந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-எ)

### வில்லிபிராண்ட் ராஜினுமா

பொன், ஜூன் 15

மேற்கு ஜெர்மனியில் சமூக ஜனநாயகக் கட்சித் தலைவர் பதவியில் இருந்து வில்லி பிராண்ட் ராஜினாமாச் செய்து விட்டார்.

உத்தியோக பூர்வமாக நேற்று தனது இராஜினாமாவை இவர் சமர்ப்பித்தார். (இ—எ)

## இத்தாலியில் கம்யூனிஸ்ட் கட்சி பதவிக்கு வரும் சாத்தியம்

ரோம், ஜூன் 15

இத்தாலியில் மூன்றுவது நாளாக நேற்றும் நாடாளுமன்றத் தேர்தலுக்கான வாக்களிப்பு நடைபெற்றது.

630 ஆசனங்களைக் கொண்ட கீழ் சபைக்கும் 315 ஆசனங்களைக் கொண்ட மேல் சபைக்கும் இத்தேர்தல் நடைபெறுகின்றது.

கம்யூனிஸ்ட் கட்சியே தேர்லில் முன்னனியில் இருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

1947க்குப் பின்னர் இத்தாலியில் கம்யூனிஸ்ட் அரசு ஒன்று அமைக்கப்படுவதற்கான வாய்ப்பு உருவாகியுள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது.

1983 இல் இருந்து கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சியின் தலைமையிலான கூட்டணியே பதவி வகித்து வந்தது.

இன்னும் ஓராண்டு காலம் ஆட்சி நடத்தக் கூடிய வாய்ப்பு இருந்தும் கடந்த மாதம் கூட்டணி அரசு பதவியிழக்கவேண்டியதாயிற்று.

அதைத் தொடர்ந்தே இந்த இடைத்தேர்தல் நடைபெற்றது. (இ-எ)

பதவி கவிழ்க்கப்பட்ட ஷாவுடன்

## பதவி கவிழ்க்கப்பட்ட ஷாவுடன் இணக்கம் காண ஆப்கான் ஜனாதிபதி முயற்சி

காபூல், ஜூன் 15

ஆப்கானிஸ்தானில் பதினறு ஆண்டுகளுக்கு முன்னர் பதவி கவிழ்க்கப்பட்ட மன்னர் ஷாவுடன் தேசிய இணக்கம் ஒன்றைக்காண ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி நஜிபுல்லா முன்வந்திருக்கின்றார்.

கடந்த எட்டு ஆண்டுகளுக்கு மேலாக நடத்தப்பட்டும் கிளர்ச்சிக்காரர்களின் போராட்டத்துக்கு முற்றுப்புள்ளி வைக்குமுகமாகவே ஆப்கன் தலைவர் நஜிபுல்லா இந்த நடவடிக்கையை மேற்கொண்டிருக்கின்றார்.

இப்படி டாஸ் செய்தி ஸ்தாபனம் அறிவித்திருக்கிறது.

ஏற்கனவே கிளர்ச்சிக்காரர்களுடன் தேசிய இணக்கம் ஒன்றைக் காணுமுகமாக ஆப்கான் அரசு ஒரு தலைப்பட்சமாக யுத்த நிறுத்தமொன்றை பிரகடனம் செய்திருந்தது.

அதை கிளர்ச்சிக்காரர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.

இந்த நிலையில்தான் பதவி கவிழ்க்கப்பட்ட மன்னருடன் பேச்சுக்கள் நடத்தி தேசிய இணக்கம் ஒன்றை ஏற்படுத்தி அதன் மூலம் ஆப்கான் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றை உருவாக்க ஆப்கன் அரசு முன் வந்துள்ளது.

பதவி கவிழ்க்கப்பட்ட மன்னர் ஷா வெளி நாட்டில் வசித்து வருகின்றார். (இ—எ)

## வெளி உலகில்

### ஹரியானா தேர்தல் நாளை

சண்டிகார், ஜூன் 16

ஹரியானா மாநில சட்டசபைத் தேர்தல் நாளைபுதன்கிழமை நடைபெறும்.

90 தொகுதிகளில் 87 தொகுதிகளுக்கே தேர்தல் நடைபெறும்.

மூன்று தொகுதிகளுச்கான தேர்தல் ஒத்திப் போடப்பட்டுள்ளது.

சுயேச்சை வேட்பாளர்கள்மூவர் மரணமானதே இதற்குக் காரணம்.

### ஆயுதக் குறைப்பு உடன்பாடுசாத்தியம்

மாஸ்கோ, ஜூன் 15

ஆயுதக்குறைப்பு பற்றிய உடன்பாடு ஒன்று ஏற்படும் சாத்தியம் வெனிஸ் உச்சிமாநாட்டின் பின்னர் அதிகரித்து இருப்பதாக அமெரிக்கா அறிவித்திருக்கின்றது.

அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜோர்ஜ் ஷுல்ட்ஸ் இதனை சோவியத் டெலிவிஷனுக்கு அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்திருக்கின்றார்.

வெனிஸ் உச்சிமாநாட்டில் ஏழு கைத்தொழில் வளர்ச்சி பெற்ற நாடுகள் கலந்து கொண்டன.

அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், மேற்கு ஜெர்மனி, கனடா, ஜப்பான், இத்தாலி ஆகிய நாடுகளே இந்த மாநாட்டில் கலந்து கொண்டன. (இ-எ)

### சர்வாதிகாரி சார்பில் மேன்முறையீடு

பாரிஸ், ஜூன் 14

மரணதண்டனை விதிக்கப்பட்ட மத்திய ஆபிரிக்கக் குடியரசின் முன்னாள் சர்வாதிகாரி பொக்காஸோ சார்பில் அப்பீல் செய்யப்பட்டிருக்கிறது.

கொலை, பணமோசடி ஆகிய குற்றங்களைப் புரிந்ததற்காக அவர் குற்றவாளியாகக்காணப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டது தெரிந்ததே.

நரமாமிசம் புசித்ததாக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டில் இருந்து அவர் விடுவிக்கப்பட்டார். (உ எ)

### அணிசேரா அமைப்பின் கூட்டம் முடிவு

பியாங்கியாங், ஜூன் 14

வடகொரிய தலைநகரில் நடைபெற்ற அணிசேரா இயக்க நாடுகளின் வெளி விவகார அமைச்சர் கூட்டம் முடிவடைந்தது.

கூட்டத்தின் முடிவில் பியாங்கியாங் பிரகடனம் வெளியிடப்பட்டது. (உ-எ)

# இராணுவ முகாமில் நிர்வாணமாக்கி தாக்கினார்கள்

கொழும்பு மேல் நீதிமன்றத்தில் குற்றவாளிக் கூண்டில் இருந்தவாறு வண பிதா சிங்கராயர்முன் வைத்த தகவல்கள் இங்கு தரப்படுகின்றன.

பி 7 என்ற ஆவணம் நான் திரு. புண்ணிய டீ சில்வாவுக்கு அளித்த வாக்குமூலம் அல்ல என்பதை முதற்கண் மதிப்புடன் கூற விரும்புகிறேன்.

1982 ஆம் ஆண்டு நவம்பர் 2 ஆம் திகதி சமாதானம் நீதிக்கான கமிஷன் நடத்திய கருத்தரங்கில் பங்குபற்றினேன். அக்கருத்தரங்கில் பல விடயங்களை 6 ஆம் திகதிவரை விவாதித்தோம்.

அன்று மாலை தொடக்கம் 13 ஆம் திகதிவரை கிராண்பாஸ் பரிஷ் பிரிவினருக்கு சமய உபதேசம் செய்தேன். அன்றிரவே பஸ் மூலம் யாழ்ப்பாணம் பயணமானேன். 14 ஆம் தேதி காலை 5.45 அளவில் யாழ்ப்பாணம் சென்றடைந்தேன்.

முன்னைய ஏற்பாட்டின்படி வண. பிதா ஜேரோம் லம்பேர்ட் என்னை பஸ் நிலையத்தில் சந்தித்தபோது எமது இல்லமான 'அமல உற்பவத்தில்' இராணுவத்தினர் தேடுதல் நடத்தியதாகக் கூறினார்.

வண. பிதா போல் நதீஸ்திரம், வணபிதா ஜீவாபோல், ஆகியோர் கைதாகிய செய்தியையும், அங்கிருந்து பணம் கோவைகள் ஆகியவை எடுத்துச் செல்லப்பட்ட விவரத்தையும் அவர் என்னிடம் கூறினார்.

இராணுவத்தினர் என்னைத் தமது இராணுவ முகாம் வருமாறு கூறியதாகவும் என்னிடம் இவர் தெரிவித்தார்.

'தொடர்பகம்'சென்ற நான் வணபிதா லூசியன் ரெஜினால்ட்டுடன் அவரது மோட்டார் சைக்கிளில் அன்று காலை 6. 15 மணிக்கு இராணுவமுகாம் போனேன்.

### மூட்டை உள்ள நாற்காலி

இராணுவ முகாமில் வைத்து பொலீஸ் இன்ஸ்பெக்டர் கலகே, உதவி இன்ஸ்பெக்டர் விஜய திலக்கா, உதவி பொலீஸ் அதிபர் ஹில்டன் பெரேரே ஆகியோர் என்னை விசாரணை செய்தனர். என்னைத் தங்களுடன் ஒத்துழைக்குமாறு அவர்கள் வேண்டினார்கள். நான் அவர்களிடம் உண்மை பேசினேன். விசாரணை 15 ஆம் திகதியும் தொடர்ந்தது.

15 ஆம் திகதி இரவு ஒரு குற்றவாளிபோன்று நடத்தப்பட்டேன். இன்ஸ்பெக்டர் கலகே என்னை அடித்தார். எனது கண்களை நோக்கி வெளிச்சம் பாய்ச்சப்பட்டது. எனது முகத்தில் தண்ணீர் தெளித்தனர்.

அபே என்ற உத்தியோகத்தர் என்னை நிர்வாணமாக்கித் தாக்கினார். என்னை நித்திரை செய்ய அனுமதிக்கவில்லை. மூட்டையுள்ள நாற்காலியில் இருத்தி வைக்கப்பட்டேன்.

16 ஆம் திகதி புண்ணிய டீ சில்வா அங்கு வந்தபோதிலும் பழைய குழுவினரே விசாரணைகளைத் தொடர்ந்தார்கள்.

அடிக்கடி அங்கு சமுகம் அளித்த புண்ணிய டீ சில்வா எனக்கு எழுத்து வேலை தந்தார்.

அப்போது எனது பணிகள் பற்றியும் டாக்டர் இராஜசுந்தரத்துடன் எனக்குள்ள தொடர்புகள் பற்றியும் அவர் விசாரித்தார்.

புண்ணிய டீ சில்வா தனது சாட்சியத்தில் கூறியது போன்று சாவகச்சேரி பொலீஸ் நிலையத் தாக்குதல்பற்றியோ பதடின் வாங்கியது பற்றியோ அல்லது ராஜன் பற்றியோ அவர் கேள்விகள் கேட்கவில்லை.

### அறை சோதனையிடல்

17 ஆம் திகதியும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு அமல உற்பவத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டேன்.

எனது அறையைச் சோதனையிட்ட அவர்கள் சில ஆவணங்களை எடுத்துச் சென்றார்கள்.

நாம் அங்கு அரை மணித்தியாலம் தங்கியிருந்தோம்.

புண்ணிய டீ. சில்வா தனது சாட்சியத்தில் சொன்னவாறு அங்கு மொழிபெயர்ப்பு நடைபெறவில்லை. மொழிபெயர்த்ததாகச் சொல்லப்பட்ட உத்தியோகத்தர் அங்கு பிரசன்னமாயிருக்கவில்லை.

### பிரார்த்தனைக்கு அனுமதி இல்லை

17 ஆம் திகதி அன்று தான் எனக்குக் கட்டில் தரப்பட்டது. என்னை நித்திரை செய்ய அனு...

(4 ஆம் பக்கம் பார்க்க)



**பொய்யாமொழி**

**குறள்:**

ஆகாறு அளவிட்டி தாயினுங் கேடில்லை
போகாறு அகலாக் கடை.

**பொருள் :**

பொருளின் அளவு அறிந்து வாழாதவனுடைய வாழ்க்கை (பலவளமும்) இருப்பது போல் தோன்றி இல்லாமல் மறைந்து கெட்டுவிடும்.

# காங்கேசன், மாவிட்டபுரம் தெல்லிப்பளைபகுதிகளில் தபால்சேவை ஸ்தம்பிதம்

காங்கேசன்துறை, ஜூன் 16

இராணுவ நடவடிக்கை காரணமாக காங்கேசன் துறை, மாவிட்டபுரம், தெல்லிப்பளை தபால் நிலையங்கள் இயங்க முடியாத நிலையில் உள்ளன.

இதனால் சகல தபால் சேவைகளும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன.

காங்கேசன் துறை, மாவிட்டபுரம் தபால் நிலையங்கள் ஏற்கனவே அப்பகுதியில் நிலவிய வன்செயல்கள் காரணமாக வேறு இடங்களுக்கு இடம் மாறியபோதும் கடந்த 7ஆம் திகதிய வன்செயல்களுடன் இத் தபால் நிலையங்களும் செயலிழந்துள்ளன.

அத்துடன் தெல்லிப்பளை தபால் நிலையமும் தற்போது செயலிழந்துள்ளது.

மக்கள் அந்தந்தப்பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்ததால் தபால் பட்டுவாடாவும் ஸ்தம்பிததுள்ளது. (இ—68)

### அகதிகள் பராமரிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 16

இணுவில் பொதுநூலகம் சனசமூக நிலையம் அச்சுவேலி, தெல்லிப்பளை, வயாவிளான், குரும்பசிட்டி, காங்கேசன்துறை, தையிட்டி ஆகிய பகுதிகளிருந்து பாதிக்கப்பட்டு வெளியேறிய சுமார் முப்பத்தெட்டுக் குடும்பங்களைக் கொண்ட இருநூறு பொதுமக்களுக்கு இணுவில் சைவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் புகலிடம் கொடுத்து அவர்களுக்கேற்ற உணவு வகைகள், மற்றும் இதர வசதிகளைச் செய்து பராமரிகின்றது.

இதற்கு ஊர்ப் பொது மக்களும், வர்த்தர்களும், சாரணர்களும் உதவி ஒத்தாசைகள் வழங்கி வருகின்றனர். (இ(

### பிரசாவுரிமை வழங்கும் வேலை துரிதம்

கொழும்பு, ஜூன் 16

ஆகஸ்ட் மாத முடிவுக்குள் நாடற்ற இந்திய வம்சாவழியினருக்கு பிரசாவுரிமை வழங்குவதற்காக மேலும் ஆயிரத்து இருநூறு ஊழியர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

பிரசார உரிமை வழங்குவதைத் துரிதப்படுத்தும்படி இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் வற்புறுத்தியதைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. (இ—எ)

### வை. எம். சி. ஏ. அகதிகளுக்கு உதவி

வட்டுக்கோட்டை, ஜூன் 16

கீரிமலை, இளவாலை, பன்னாலை ஆகிய கிராமங்களில் இருந்து இடம் பெயர்ந்து வந்து பண்டத்தரிப்பு திருச்சபைத் தேவாலயத்தில் தஞ்சம் அடைந்திருக்கும் ஆயிரக்கணக்கான அகதிகளுக்கு பண்டத்தரிப்பு வை. எம். சி. ஏ. உணவுப் பொருள்களை வழங்கி வருகின்றது.

இங்குள்ள அகதிகளின் சுகாதார வசதிகளையும் மேற்படி வை. எம். சி. ஏ. கவனித்து வருகிறது. (உ—161

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

YOUR FRIENDS IN FINANCE

SHABRA

நிதித்துறையில் உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்

SHABRA UNICO FINANCE LTD.

# உதயன்

16 — 06 — 1987 செவ்வாய்க்கிழமை

YOUR FRIENDS IN FINANCE

SHABRA

நிதித்துறையில் உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்

SHABRA UNICO FINANCE LTD.

## வித்தாரம்

என்ன முரளியார் ஒரு பெரிய சூட்கேசோடை கிளம்பிவிட்டீர்? உமக்கும் இந்தியாவுக்குப்போற எண்ணம் வந்திட்டுதோ?

அதுதானே கேட்டேன். நீ கொழும்பாலை வந்தனி எல்லே. அங்கை தெரிஞ்சவை எல்லாம் சொந்தக்காரருக்குக் கொஞ்சம் கொஞ்சம் எண்டு சாமான்கள் தந்து உம்முடைய சூட்கேசை நிரப்பிவிட்டிருப்பினம்.

தம்பி கஷ்டத்தைப் பாராமல் இதை ஒருக்காக் கொண்டுபோய் மானிப்பாயில் குடுத்து விடும், வட்டுக்கோட்டையிலை குடுத்து விடும், சங்கானையிலை குடுத்து விடும், சுன்னாகத்திலை குடுத்து விடும் எண்டு ஒவ்வொருவரும் தலைசொறிஞ்சிருப்பினம். நீயும் வாங்கிக் கொண்டு வந்திருப்பாய்.

எப்பிடி, வழியிலை எழுபது இடங்களிலை இராணுவமார் சோதிச்சிருப்பினமே.

இப்ப அவை கொஞ்சம் தாராள மனப்பான்மையுடன் நடக்கினமோ? சரி சரி. 'ஒப்பறேஷன் லிபறேஷ'' னுக்கு அடுத்தது ''ஒப்பறேஷன் குட்வில்'' எண்டு சொன்னவைதானே. வழிதெருவிலை சோதனை செய்யிறதிலை மட்டும்தான் அந்த ''குட்வில்லை''(நல்லெண்ணத்தைக்) காட்டுகினம் போலை ... ஆனால் வடமராட்சியிலை சோதனை எண்டு மக்களுக்குக் குடுக்கிற வேதனை தெரியும்தானே.

உந்த ஒப்பறேஷனுகளை எல்லாம் திட்டமிட்ட ''மாஸ்டர் மயின்ட்'' அச்சாணியார், பாகிஸ்தான் போய்விட்டார் தெரியுமே!

என்னத்துக்கு எண்டு சொல்லத் தேவையில்லை எண்டு நினைக்கிறேன். இந்தியாவை எதிர்த்துத் தாக்குதல் செய்யக்கூடியதாக ஸ்ரீலங்கா இராணுவ பலத்தை அதிகரிக்கப்போகினம். அதுதான் உந்த அவசரப் பயணங்கள்.

''அப்பனே! என் அப்பனே!! அமெரிக்காவே, என் தெய்வமே!! உன் அடியானை — அதுதான் அடியேனைக் காப்பாற்று'' என்று அமெரிக்காவின் காலில் விழுகிறதுக்கு அங்கை போறதாகத்தான் முதலில் அறிவிச்சவை. அச்சாணியாரோடை இராணுவ உயர்அதிகாரியும் போறதாக இருந்திது.

ஆனால் அவர் அச்சாணியார் திடீரெனப் பாகிஸ்தானுக்குப் பறந்திட்டார். இந்தியாவோடை மிண்டுறது எண்டுதான் நிக்கினம். பாகிஸ்தான் அமெரிக்கா மட்டுமே இஸ்ரவேலுக்கும் செதியிலை போவினம்.

அதுக்காகத்தானே அரசாங்கக் கட்சியாயே இந்திய எதிர்ப்பு ஆரப்பாட்டங்கள், ஊர்வலங்கள் எல்லாத்தையும் ஏற்பாடு செய்து அமோகமாக நடத்தினவை.

உனக்குத் தெரியுமே? கத்தோலிக்கர்கள் இந்திய எதிர்ப்பு ஊர்வலம் நடத்தினதாக ரி. வி. யிலை பெரிசாக் காட்டினவை எல்லே! பெரிய ஊர்வலம் கூடினதாகக் காட்டிச்சினம். ஆனால் ஏதோ ஒரு மாநாடு நடத்தப்போவதாகக் கூப்பிட்டுத்தானும் பிறகு ஊர்வலத்துக்குக் கூட்டிக்கொண்டு போனவை! விஷயம் தெரியாமல் பல தமிழ்க் கத்தோலிக்கர்களும் மாநாடு எண்டு போய் ஊர்வலத்திலை பங்கு பற்ற வேண்டிய பலவந்தத்துக்கு ஆளாகிச்சினமாம்.

அவை நடத்தின ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள் ஓரளவுக்கு வேலை செய்திருக்கு எண்டுதான் சொல்லவேணும்!

என்ன முழிக்கிறாய்! யாழ்ப்பாணத்துக்கு உணவுப் பொருள் குடுக்கிற விஷயத்திலை இந்தியாவைத் தங்கடை பல ''கொண்டிசன்'' களுக்கு ஒப்புக்கொள்ளச் செய்து போட்டினம் பாத்தியே!

எப்பிடியும், கஷ்டப்படும் யாழ் மக்களுக்கு உணவுப் பொருள் போய்ச் சேர வேணுமே எண்ட யோசனையிலை ஸ்ரீலங்காவின்ரை நிபந்தனை எல்லாத்துக்கும் இந்தியா ஒப்புக்கொண்டிருக்கலாம்.

உதோடை விஷயம் முடிஞ்சதாய் நினைக்கக் கூடாது. மேலும் திடீர் திடீர் திருப்பங்கள் எல்லாம் வரும்.

யாழ் மக்கள் உணவுப் பொருள்கள் இல்லாமல் பட்டினி கிடக்கிறார்கள் எண்டதை ஸ்ரீலங்கா ஏற்றுக்கொண்டு விட்டதற்கு டிக்ஸிற்—ஹமீத் ஒப்பந்தம் ஒரு பெரிய அத்தாட்சி. இப்போதைக்கு அதைத் தான் சொல்லலாம்.

சரி, நான் வாறேன்!



## காலி செல்லும் வழியில்

# கப்பலில் சித்திரவதையால் இறந்த இளைஞன்

## சடலம் கடலில்

— வல்வைச் செய்தியாளர் சி. சுந்தரலிங்கம் —

வல்வெட்டித்துறை, ஜூன் 16

சிப்பாய்களிடம் சிக்கி கடும் சித்திரவதைகளை அனுபவிப்பதிலும் பார்க்க நஞ்சு குடித்து தற்கொலை செய்வதுநல்லது. வடமராட்சியில்கைதாகி பூஸாவுக்குக் கொண்டு செல்லப்பட்ட வாலிபர் ஒருவர் கப்பலில் இறந்தார். அவரது உடலை சிப்பாய்கள் நடுக்கடலில் தூக்கி எறிந்தனர்.

இவ்வாறு வதிரியைச் சேர்ந்த இரு சகோதரர்கள் கூறினார்கள்.

இவர்கள் இருவரும் கடந்தமாதம் வடமராட்சியில் கைதாகி பூஸா கொண்டு செல்லப்பட்டு தற்போது விடுதலையாகியுள்ளனர்.

இவர்கள் தமக்கு நேர்ந்த துயர அனுபவங்களை எமது செய்தியாளரிடம் தெரிவித்தனர்.

இவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

கைதான வடமராட்சி இளைஞர்களை காங்கேசன் துறைமுகம் வரை நடத்தியே சிப்பாய்கள் கொண்டு சென்றனர்.

கடும் வெயிலில் இரண்டு மூன்று நாட்களாக எதுவித உணவோ, தண்ணீரோ இன்றி இளைஞர்கள் நடத்திச் செல்லப்பட்டனர்.

பல இளைஞர்கள் இதனால் வழியில் மயங்கி விழுந்தனர். தண்ணீர் கேட்டால் சிப்பாய்கள் மல சல கூடம் கழுவும் தண்ணீரையே குடிக்கக் கொடுத்தனர்.

16 இளைஞர்கள் வரை ஒரே சங்கிலியால் கட்டப்பட்டனர். ஒருவர் மலம் கழிக்க வேண்டுமென்றால் 16 பேரும் அவருடன்சேர்ந்தேஅமர வேண்டும்.

பல மணி நேரம்கடும் வெயிலில் நிரையாக நிற்க வைப்பார்கள்.

முகமூடிகளைக் கொண்டு தலையாட்ட வைப்பார்கள்.

முகமூடிகள் வரும் போது இளைஞர்கள் வேண்டாத தெய்வங்கள் இல்லை.

கப்பலில் கொண்டு செல்லும் போதும் கொண்டு வரும்போதும் சிப்பாய்கள் இளைஞர்களை சித்திரவதை செய்வார்கள்.

சித்திரவதைகளின் கொடுமையால் கப்பலில் இறந்த ஒரு பருத்தித்துறை இளைஞரின் உடலை நடுக்கடலில் வீசிவிட்டார்கள்.

இவ்வாறு அவர்கள் கூறினார்கள். (இ-ள-160)

### இரத்தம் இல்லை டாக்டர்கள் கொடுக்கின்றனர்

யாழ்ப்பாணம், ஜூன் 16

யாழ்- ஆஸ்பத்திரி இரத்த வங்கியில் இரத்தம் பற்றுக் குறை ஏற்பட்டுள்ளது.

காயமடைந்து வரும் நோயாளர்களுக்கு உடன் வழங்க இரத்தம் இல்லாததன் காரணமாக நேற்று வைத்தியசாலை டாக்டர்களே இரத்த தானம் செய்தனர்.

இரத்தம் வழங்க விரும்புவோர் உடனடியாக யாழ்-வைத்தியசாலை இரத்த வங்கியுடன் தொடர்பு கொள்ளுமாறு இரத்த வங்கிப் பொறுப்பதிகாரி வேண்டுகோள் விடுத்துள்ளார். (இ-10)

## பீரங்கித் தாக்குதல்; இருவர் காயம்

யாழ்ப்பாணம், ஜூன் 16

கடற்கரைக்குப் போனவர்கள் கடற்படையினரின் பீரங்கித் தாக்குதலுக்கு இலக்கானார்கள்.

திங்கட்கிழமை இரவு இரண்டு மணியளவில் பலாலி 12 ஆம் வட்டாரத்தில் இச்சம்பவம் நடைபெற்றது.

புளுக்கம் காரணமாக வீட்டில் இருந்து கடற்கரைக்குச் சென்றவர்களுக்கே இந்தக்கதி ஏற்பட்டது.

அப்பொழுது கடற்பகுதியில் தரித்து நின்ற பீரங்கிப் படகுகளில் இருந்து மத்தாப்புப் போன்ற வெளிச்சக் குண்டுகள் விழுந்து வெடித்தனவாம்.

கணபதிப்பிள்ளை சபாரத்தினம் (வயது 53) இராசநாயகம் ஜீவானந்தம் (வயது 25) ஆகியோரே காயம் அடைந்தவர்கள் ஆவர்.

யாழ் ஆஸ்பத்திரியில் இவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். (இ-10)

### பாடசாலைகள் நேற்று மீண்டும் இயங்கின

யாழ்ப்பாணம் ஜூன் 16

யாழ். நகரப் பாடசாலைகள் பல நீண்ட நாள் இடைவெளியின் பின் நேற்று மீண்டும் ஆரம்பமாகின.

எனினும் ஆசிரியர்கள் மாணவர்களின் வரவு பாடசாலைகளில் குறைவாகவே காணப்பட்டது. (இ-ள)

## குரும்பசிட்டி - - - - -

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

சிட்டி மினி முகாமைப் போராளிகள் தாக்கத் தொடங்கினர்.

சுமார் இரண்டு முப்பது மணி அளவில் ஹெலிக்கொப்டர் வெளிச்சக் குண்டுகளை வீசியவாறு போராளிகள் மீதும்; அயல் இடங்களிலும் தாக்குதலை மேற்கொண்டது.

குரும்பசிட்டி முகாமில் இருந்தும் பலாலி, கட்டுவன் முகாம்களில் இருந்தும் தெற்கு நோக்கி மோசமான முறையில் ஷெல்கள் ஏவப்பட்டன.

குரும்பசிட்டியில் இருந்து குப்பிளானுக்கும், கட்டுவனுக்கும், வயாவிளானுக்கும் செல்லும் முச்சந்தியில் அமைந்திருந்த மேல்மாடி வீடும் அதனுடன் இணைந்த தொழிற்சாலை ஒன்றும் புலிகளால் தகர்க்கப்பட்டன.

இக் கட்டடமே இராணுவத்தின் பிரதான முகாமாகப் பாவிக்கப்பட்டது குறிப்பிடத் தக்கது.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து ஷெல் தாக்குதலும், ஹெலிக்கொப்டரின் 50 ஹலிபர் தாக்குதலும் காலை 6மணி வரை தொடர்ந்தன.

கட்டுவன், குப்பிளான், ஏழாலை, தெல்லிப்பளை, புன்னாலைக்கட்டுவன், திடற்புலம் பகுதிகளை நோக்கி மேற்கொள்ளப்பட்ட தாக்குதலால் இப் பகுதியில் இருந்த மக்கள் இரவோடிரவாக அவசர அவசரமாக வெளியேறினர்.

காலை 5.30 மணி அளவில் ஹெலிக்கொப்டர் வயாவிளான், அச்சுவேலிப் பகுதிகள்மீதும் தாக்குதல்களை மேற்கொண்டது.

இதனால் அச்சுவேலியில் இருந்தும் மக்கள் வெளியேறினர்.

காயமடைந்த பொது மக்கள் தெல்லிப்பளை, யாழ்ப்பாணம் வைத்திய சாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குப்பிளான்—கட்டுவன் பகுதிகளிலேயே அதிக வீடுகள் சேதமடைந்தன. (இ-119)

## ஒவ்வொரு - - - -

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

புலிகளை பொறுத்தவரை ஒவ்வொரு வீரனதும் தெளிவான சிந்தனையும் கொள்கைப்பற்றுடைய அசையாத உறுதியும் விடுதலைப்போரை வீறுடன் முன்னேற்றி வருகிறது.

இன்றைய ஒவ்வொரு தமிழ் மகனும் விடுதலைப் புலியாக மாறி தம் இறுதிமூச்சு வரை போராட வேண்டும்.

புலிகளுடன் இணைந்து புலிகளாகப் போராடினால் இறுதி வெற்றி என்றும் நிச்சயமானது.

இப்படி அவர் தெரிவித்தார். (இ-10)

## இராணுவ . . . .

(3 ம் பக்கத் தொடர்ச்சி)

மதித்தார்கள்.

எனது சமயப் பிரார்த்தனைகளை மேற்கொள்ள அனுமதி வழங்கப்படவில்லை. 17 ஆம் திகதி தான் பைபிள் வாசிக்க என்னை அனுமதித்தார்கள்.

கத்தோலிக்க குருவின் முக்கிய கடமையான இயுக்காரி- அனுஷ்டிக்க எனக்கு 23 ஆம் திகதி நவம்பர் 1982வரை அனுமதி வழங்கப்படவில்லை.

(இ-10)

(வளரும்)

## இந்தியாவின் . . . . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பில் இந்தியத் தூதர் திரு. ஜே. என். டிக்ஸிற்றுக்கும் வெளியுறவு அமைச்சர் சாகுல் ஹமீதுவிக்கும் இடையே நடந்தசுமார் ஒரு மணித்தியாலப் பேச்சுக்களைத் தொடர்ந்து இந்தஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

இது சம்பந்தமான கூட்டறிக்கை ஒன்று நேற்று கொழும்பிலும் புதுடில்லியிலும் ஏககாலத்தில் வெளியிடப்பட்டது.

அந்த ஒப்பந்தத்தின் பிரகாரம்—

உணவுப் பொருள்களுடனான இந்தியப் படகுகள், காங்கேசன்துறை முகத்துக்கு வரும்.

இப்படகுகளில் ஆயுதங்கள் இருக்கா.

இந்திய செஞ்சிலுவைச் சங்கம், ஸ்ரீலங்கா அரசு ஆகியவற்றின் அதிகாரிகள் உணவுப் பொருள்களைச் சோதனையிடுவர்.

இந்தியப் படகுகள் காங்கேசன்துறை துறைமுகத்துக்கு வரும் கடல் பாதையை இந்திய அரசு முன்கூட்டியே ஸ்ரீலங்கா அரசுக்கு அறிவிக்கும்.

ஸ்ரீலங்காவின் கடல் எல்லைக்குள் வந்தவுடன் ஸ்ரீலங்கா கடற்படை அதிகாரிகள், துறைமுக அதிகாரிகள் பாதுகாப்புக்கொடுத்து படகுகளை காங்கேசன்துறை துறைமுகத்துக்கு அழைத்து வருவர்.

உணவுப் பொருள்களை ஸ்ரீலங்கா அரசு (யாழ் அரச அதிபர் குழு) காங்கேசன் துறையில் பொறுப்பேற்று விநியோகிக்கும்.

வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம், யாழ் பட்டினம் ஆகிய பகுதிகளில் உணவுப் பொருள் விநியோகம் நடைபெறும்.

ஸ்ரீலங்கா செஞ்சிலுவைச் சங்கம், யாழ் செஞ்சிலுவைச் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் ஆறு பேர் இந்திய செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் ஆறுபேர் இந்திய அரசு அதிகாரிகள் இரண்டு பேர், யாழ் கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோர் ஸ்ரீலங்கா அரசு அதிகாரிகளுடன் இணைந்துசெயற்படுவர்.

இப்படி உடன்படிக்கையில் கூறப்படுகின்றது. (அ-எ)

## லியா - - - -

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உதவியை இலங்கைக்கு வழங்கியுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

அமைச்சர் லலித் பாகிஸ்தான் விஜயம் முடிவுற்றதும் ஜோர்டான் பயணமாவார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (உ-எ)

## எமது பிரச்சினையில் தலையிட இந்தியா யார்?

### பிரேமா கிளப்பும் வினா

கொழும்பு, ஜூன் 16

ஸ்ரீலங்காவின் பிரச்சினையை ஸ்ரீலங்காவே தீர்க்கவேண்டும். இதில் தலையிட இந்தியா யார்?

— இப்படிக் கேள்வி எழுப்பினார் ஸ்ரீ லங்காவின் பிரதமர் ஆர். பிரேமதாசா.

ஞாயிறன்று தென்னிலங்கையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் இப்படிக் கேட்டார்.

அங்கு பிரதமர் பிரேமதாசா மேலும் கூறியதாவது:

இலங்கைப் பிராந்தியத்தினுள் இந்தியா அத்துமீறிப் பிரவேசித்த விடயம் சார்க் மாநாட்டில் கிளப்பப்படாது என்று கூறப்படுகிறது. அப்படிச் செய்வது தவறானது.

இருதரப்பு விடயம் என்பதால் இது சார்க்கிற்கு வரக்கூடாது என்றும் கூறுகிறார்கள்.

இன்று ஸ்ரீலங்காவிற்கு நடந்தது நாளை இந்தப் பிராந்தியத்தில் இன்னொரு நாட்டுக்கு நடக்கக்கூடும். ஆகவே இது எமது பிராந்தியத்திற்குரிய விடயம்.

அங்கத்துவநாடு ஒன்றின்மீது மற்றைய அங்கத்துவநாடு நெருக்குதல் கொடுக்கக்கூடாது என்பதும், அநீதி இழைக்கக் கூடாது என்பதும் சார்க்அமைப்பின் அடிப்படைக் கோட்பாடுகளில் ஒன்று.

ஸ்ரீலங்காவிற்கு இந்தியா இழைத்ததைவிட வேறு அநீதி உண்டா?

ஆகவே இந்த விடயத்தை ஏன் சார்க் மாநாட்டில் எழுப்பக் கூடாது?

— இப்படி பிரதமர் கேள்வி எழுப்பினார்.

### ✯ யாழ் குடாநாட்டு

## அகதிகளுக்கு வசதிகளை செய்து கொடுக்குமாறு

### தமிழகத்தில் உத்தரவு

சென்னை, ஜூன் 16

யாழ் குடா நாட்டில் இருந்து தப்பி ஓடிவரும் தமிழ் அகதிகளுக்கு உணவு, உடை, இருப்பிடவசதிகளை உடனடியாகச் செய்து கொடுக்கும்படி இராமனாதபுரம், புதுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிறு நான்கு படகுகளில் 250 தமிழ் அகதிகள் கோட்டைப் பட்டினம், இராமேஸ்வரம் ஆகிய பகுதிகளைச் சென்றடைந்தனர் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

கடந்த ஆறு தினங்களில் சுமார் ஆயிரத்து ஐந்நூறு தமிழ் அகதிகள் தமிழ் நாடு சென்றனர்.

நேற்று தமிழ்நாடு புனர் வாழ்வுத்துறை அமைச்சர் திரு. இராமசாமி மண்டபம் முகாம் சென்று அகதிகளைப்பார்வையிட்டார். (இ-எ)

### மர்மயுத்த விமானங்கள்

கொழும்பு, ஜூன் 16

மர்ம யுத்த விமானங்கள் பருத்தித்துறை, சினக்குடா மீது கடந்த சில தினங்களாகப் பறந்து சென்றன.

ஸ்ரீலங்கா விமானப் படைத் தளபதி வால்டர் பெர்னாண்டோ இதனை அரசுத் தலைமைப் பீடத்துக்கு அறிவித்திருக்கிறார்.

இவ் விமானங்கள் வெளிநாட்டைச் சேர்ந்தவை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனக்குடா விமானத் தளத்துக்கு சுமார் 20 ஆயிரம் அடிமேலாகவும் இந்த யுத்த விமானங்கள் பறந்து சென்றன என்றும் அறிவிக்கப்படுகின்றது.

(ஐ-எ)

### கேரதீவு வந்த படகு கவிழ்ந்தது

சங்குப்பிட்டியில் இருந்து கேரதீவு வந்த படகு ஒன்று விபத்துக்குள்ளானது.

சுமார் 70 பயணிகளுடன் புறப்பட்ட சில நிமிடங்களில் படகு கடலில் கவிழ்ந்தது.

உயிர்ச் சேதம் ஏற்படவில்லை.

## மண்டபம் முகாமில் பத்திரிகையாளர்கள்

### அகதிகள் வருகையைப் பார்க்க

சென்னை, ஜூன் 16

தமிழ் அகதிகள் யாழ் குடாவில் இருந்து தென் இந்தியா வந்து சேருவதை நேரில் பார்க்க இந்திய மற்றும் வெளிநாட்டுச் செய்தியாளர்களை புதுடில்லி அதிகாரிகள் மண்டபம் அகதிகள் முகாமுக்கு அழைத்துச் சென்றிருக்கின்றனர்.

மண்டபம் முகாமில் உள்ள தமிழ் அகதிகளை நேற்றுமாலை இப்பத்திரிகையாளர் நேரில் சந்தித்து உரையாட ஒழுங்குசெய்யப்பட்டு இருந்தது.

கடந்த ஒருவாரத்தில் சுமார் நான்காயிரம் தமிழ் அகதிகள் யாழ்ப்பாணத்திலிருந்து வந்திருப்பதாகவும், தினமும் நூற்றுக் கணக்கானோர் வந்துகொண்டிருப்பதாகவும் புதுடில்லி அரசுப் பேச்சாளர் ஒருவர் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார்.

(இ-எ)

## விடுதலையானோரில் அறுவர் தடுத்துவைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 16

காலித் துறைமுகத்தில் இருந்து கடந்த ஞாயிற்றுக்கிழமை விடுதலை செய்யப்பட்ட 430 வடமராட்சி இளைஞர்களில் ஆறு பேர் மீண்டும் கைது செய்யப்பட்டனர்.

கப்பலில் இருந்து இவர்கள் இறக்கப்பட்டதை அடுத்து அங்கும் தலையாட்டி முன் சகலரும் நிறுத்தப்பட்டனர்.

தலையாட்டி எட்டுப் பேருக்கு தலையசைத்ததன் காரணமாக அவர்கள் தடுத்து வைக்கப்பட ஏனையோர் விடுதலை செய்யப்பட்டனர்.

எனினும் இச் சம்பவத்தை அறிந்து வடமராட்சி இராணுவப் பொறுப்பதிகாரியுடன் பெற்றோர்கள் தொடர்பு கொண்டதை அடுத்து இரண்டு இளைஞர்கள் விடுதலையான போதிலும் ஆறு இளைஞர்கள் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

(இ-10)

## நீத்தார் பட்டியல்

### ஐயம்பிள்ளை கனகசபை

யாழ்ப்பாணம் முன்னாள் வர்த்தகரும் புங்குடுதீவைச் சேர்ந்தவருமான ஐயம்பிள்ளை கனகசபை காலமானார். இவர் காலஞ்சென்ற திருமதி மனோன்மணியின் கணவரும், பத்மநாதன் புங்குடுதீவு, (முன்னாள் நீர்கொழும்பு வர்த்தகர்), சபாநாதன் (கணக்காளர் வ. பி. போ. ச. வவுனியா), ஸ்ரீநாதன் (சுவிஸ்), ராஜநாதன் (பிரான்ஸ்), செல்வநாதன் (கனடா), திருமதிகள் கனகாம்பிகை, பத்மாநிதி, தயாநிதி, சிவாநிதி ஆகியோரின் தந்தையும், சதாசிவம் (லிங்கம் ஸ்ரோர்ஸ்) யாழ். இலுப்பையடிச் சந்தி), அருணாசலம் (பிரான்ஸ்), தேவராசா (பிரான்ஸ்), காங்கேசன், திருமதிகள் ஜெயகௌரி, தனலட்சுமி, சரோஜா ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற வர்த்தகர் நடராஜா (கரம்பொன்) திருமதிகள் சின்னத்தம்பி தங்கம்மா (புங்குடுதீவு), பொன்னம்பலம் காமாட்சி (அனலைதீவு) ஆகியோரின் சகோதரரும் ஆவார். பூதவுடல் யாழ்ப்பாணம் 51/1, இராசாவின் தோட்டம் வீதியிலுள்ள அன்னாரது இல்லத்திலிருந்து (17-6-87) நாளைக்காலை 10 மணிக்குக் கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

(1426) தகவல்: பொ. சதாசிவம்

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிடெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 16-06-1987.

Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd at 292/2 Navalar Road, Jaffna on Tuesday June 16, 1987 Registered as a Newspaper at the General Post Office under number QJ/94/N/87

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org